# Warning Signs After Delivery
# குழந்தை பிறந்தபின் கடைபிடிக்கும் முக்கிய விபரங்கள்

| எண் | பிரச்சனை | என்ன செய்யவேண்டும் |
|---|---|---|
| 1 | கடினமான தலைவலி | விடாத கடினமான தலைவலி ஜன்னி வருவதற்கான முக்கிய அறிகுறி . எனவே தலைவலி இருந்தால் உடனே மருத்துவமனைக்கு செல்வது மிக மிக முக்கியம்.<br><br>ஜன்னி வந்தால் உயிருக்கு ஆபத்து வரலாம் அல்லது பக்கவாதம் வரலாம். எனவே கட்டாயம் உடனே மருத்துவமனைக்கு செல்லவும் , |
| 2 | அதிகமான ரத்த போக்கு | குழந்தை பிறந்தபின் 6 வாரங்களுக்கு ரத்தப்போக்கு தொடரும் .<br>அனால் ரத்தப்போக்கு அதிகமாகி உதிரம் கட்டியாக போனாலோ 1-2 மணி நேரத்தில் துணி மாற்ற வேண்டியிருந்தாலோ கவலைக்கு இடமான நிலைமை ஏற்பட அதிக வாய்ப்பு உள்ளது.<br>தலை சுத்தல் , பலஹீனம் போன்ற அறிகுறிகள் இந்த நிலைமையை உறுதிப்படுத்தும்<br>உடனே மருத்துவ மனைக்கு செல்வது மிக முக்கியம். |
| 3 | பேறுகால நோய்ப்பூச்சித்தாக்கல் | காய்ச்சல் , தலைவலி, குளிர் காய்ச்சல் உடல் வலி, அடிவயிற்றில் வலி, ரத்தப்போக்கில் துர்நாற்றம் இவைகள் பேறுகால நோய்ப்புச்சித்தாக்கலின் அறிகுறிகள். இந்த அறிகுறிகள் இருந்தால் உடனே மருத்துவமனைக்கு செல்லவேண்டும் .<br>உடனே மருந்துகொடுத்தால் விரைவில் குணப்படுத்தலாம் .<br>உடனே செல்லவும் . |

| | | |
|---|---|---|
| 5 | மார்பகம் சிவந்து வீங்கி வலியெடுத்தல் | பால் கட்டியிருந்தாலும் மார்பகம் கல் போல் வீங்கி வலியெடுக்கும். ஆனால் மார்பகம் சிவந்து, ஒருபகுதி வீங்கி காய்ச்சலும் ஏற்படுமானால் மார்பகத்தில், சிறு கிருமிகள் சேர்ந்து சீழ் பிடிக்க வாய்ப்புள்ளது . எனவே, இந்த அறிகுறிகள் இருந்தால் உடனே மருத்துவ மனைக்கு வரவேண்டும் |
| 6 | பெண்ணுறுப்பு பகுதியில் தையல் | குழந்தை பிறக்கும்போது ஏற்படும் கிழிசல்களை தையலிட்டு குணப்படுத்துவார்கள். இந்த இடத்தை சுத்தமாக வைத்திருப்பது மிக அவசியம் . இந்த இடத்திலும் கிருமிகள் சேர்ந்து, சீழ்  பிடிக்கலாம். அந்த இடத்தில, வலி அதிகமாகி, விண் விண் என்று வலிக்குமானால்,சீழ் பிடிக்கும் வாய்ப்பு அதிகம் .உடனே மருத்துவமனைக்கு செல்லவேண்டும் |
| 7 | அறுவைசிகிச்சையால் குழந்தை பிறந்திருந்தால் கவனிக்கும் முறைகள் | **அறுவை சிகிச்சை செய்ததால் அதிகம் நடக்க கூடாது என்பது தவரான எண்ணம் நடப்பது மிக முக்கியம்**. நடக்காமல் அதிகநேரம் படுத்திருந்தாள், காலிலுள்ள ரத்தக்குழாய்களில் ரத்தம் உறைந்துபோய் மிகவும் ஆபத்தான நிலைமை ஏற்படும். ரத்த  கட்டி பிரிந்துபோய் நுரையீரலை தாக்கி உயிருக்கு ஆபத்தை விளைவிக்கும். கெண்டைக்கால் வீங்கி மூச்சுவிட கடினமாக இருந்தால் உடனே காலம்தாழ்த்தாமல் மருத்துவமனைக்கு செல்லவேண்டும். சிலசமயங்களில், சிறு காலதாமதம் கூட ஆபத்தான நிலைமைக்கு காரணமாகும். |